**தலைப்பு – 136 – விளையாட்டுத்துறை அமைச்சு, அவ்வமைச்சின் கீழேயுள்ள விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்திகளில் அமைச்சின் கீழான திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி தொடக்கம் தலைப்புகளுக்கான கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| **தலைப்பு** | **திணைக்களம்** |
|---|---|
| 219 | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் |
| - | விளையாட்டுச் சங்கங்கள் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேலே 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விளையாட்டுத்துறை அமைச்சினதும் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களங்களத்தினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக கூற்றுக்கள், புத்தகங்கள் பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்ட திகதிகளில் அந்த அமைச்சினதும் திணைக்களத்தினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தலின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
| --- | --- | --- |
| 136 | விளையாட்டுத்துறை அமைச்சு | 2015 செப்டெம்பர் 09 |
| 219 | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 2015 செப்டெம்பர் 09 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,464.47 மில்லியனாகும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 2,422.93 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புகள் முறையே ரூபா 332.04 மில்லியன் மற்றும் ரூபா 709.50 மில்லியன் அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 27 சதவீதத்திலிருந்து 31 சதவீதம் வரையாகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்பு, தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 136 | 1,210.32 | 878.28 | 332.04 | 27.43 |
| 219 | 2,254.15 | 1,544.65 | 709.50 | 31.48 |
| மொத்தம் | 3464.47 | 2,422.93 | 1,041.54 | 30.06 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு பணிகளுக்காக விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தால் ரூபா 53 மில்லியன் விளையாட்டுத்துறை அமைச்சிற்கு நிதியேற்பாடாக வழங்கப்பட்டிருந்தது. அமைச்சு அம் மொத்த நிதியேற்பாட்டையும் பயன்படுத்தியிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றம் விதித்துள்ள எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றம் விதித்துள்ள எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 13601 | 5.00 | 4.11 | 2.80 | 6.22 | 24.00 | 12.28 |
| 21901 | 8.01 | 8.01 | 4.00 | 5.49 | 30.00 | 26.74 |

## 2.3 கட்டு நிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழான விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதி மீதி ரூபா 108,672 ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்தினது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 193.0 மில்லியனாகும். விபரம் பின் வருமாறு.

| அமைச்சு / திணைக்களம் | பொது வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| விளையாட்டுத்துறை அமைச்சு | 6000/0000/00/0015/0048/000 | 25.6 |
| விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 6000/0000/00/0015/0100/000 | 167.4 |
| மொத்தம் | | **193.0** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றின் ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்று தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தி தொடக்கம் 5 ஆம் பந்தி வரையிலான பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**3. தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சு**

**3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை**

அமைச்சு பின்வரும் சில பதிவேடுகளைப் பேணாததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்படும் பேணப்படவில்லை என்பது தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | கணணி, துணைப்பாகங்கள், மென் பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை. |
| (ஆ) | காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | பேணப்படவில்லை. |
| (இ) | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களது தகவல்கள் அடங்கிய பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்படவில்லை. |
| (ஈ) | மின் உபகரணப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்படவில்லை. |
| (உ) | கொள்வனவுக்குழுவின் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.11.2 | பேணப்படவில்லை. |
| (ஊ) | கொள்வனவுக்குழுக் கூட்ட அறிக்கைகள் | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.11.3(அ) | பேணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | பொறுப்புகளுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஏ) | வாகனச் சம்பவப் பதிவேடுகள் | நிதிப்பிரமாணம் 1645(அ) | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஐ) | வாகனங்களை நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**3.2 கணக்காய்வுச் சான்றின்மை**

---------------------------------------------

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(அ) மீளாய்வாண்டின்போது அமைச்சினால் தேசிய ஒலிம்பிக் குழு மற்றும் விளையாட்டுச் சங்கங்களுக்கு ரூபா 68,167,465 கொடுப்பனவு செய்யப்பட்ட போதும், செலவானது அரசாங்க சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கிணங்க செலவிடப்பட்டதை உறுதி செய்வதற்குத் தேவையான சான்றுகளை அமைச்சு பெற்றிருக்கவில்லை. அவ்வாறே, செலவின அறிக்கைகளைப் பெற்று நிதி பயன்படுத்தப்பட்டதனால் ஏற்பட்ட பலன் குறித்துத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்வதற்குப் போதுமான சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்படாது அமைச்சானது ஊடகச் செயலாளர் ஒருவருக்கு வாடகைக்குப் பெற்றிருந்த வாகனம் தொடர்பாக 2014 ஆம் ஆண்டிற்கென ரூபா 474,000 கொடுப்பனவு செய்திருந்தபோதும், குறித்த வாகனத்தின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) வெசாக் வாரத்தின் போது கட்டிட மின் அலங்காரத்தின் பொருட்டு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 350,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்குரிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்

திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டு நிதி எல்லைகளின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திலும் எதிர்பார்த்தவாறான கட்டு நிதியைத் திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களம் வழங்கியிருந்தது. அவ்வாறே, கட்டளை வழங்கப்பட்டிருந்த பொருட்கள் அமைச்சில் கிடைக்கப்பெறாமையால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாது, அதன் விளைவாக, 34 செலவின விடயங்களுக்கென வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 11 முதல் 100 சதவீதம் வரையானவற்றை அமைச்சினால் பயன்படுத்த முடியாது போயிற்று.

## 3.4 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 371 குறிப்பிடும் ஏற்பாடுகளுக்கு முரணாக நிறைவேற்று தரம் அல்லாத 11 உத்தியோகத்தர்களுக்கு 20 சந்தர்ப்பங்களில் ரூபா 341,616 செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கீழ் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் தவிர ஏனைய நபர்களுக்கு செயல் நிமித்த உப கட்டுநிதியை வழங்கும் போது அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறான அங்கீகாரத்தைப் பெறாது அமைச்சின் விளையாட்டு நிதியம் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை ஆகியவற்றின் பெயரில் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 290,700 கூட்டுத்தொகை கட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) பெறப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி பணி முடிவுற்றதும் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டியபோதும், 25 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 563,563 கூட்டுத்தொகையுடைய செயல் நிமித்த உப கட்டுநிதி பணி முடிவடைந்து 15 நாட்கள் தொடக்கம் 5 மாதங்கள் வரையான தாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம், ஒரு நிறைவேற்றுதர உத்தியோகத்தர்க்கு ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய அதி கூடிய செயல் நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 ஆயினும், அதற்கு முரணாக 03 சந்தர்ப்பங்களில் 3 உத்தியோகத்தர்களுக்கு செயல் நிமித்த உப கட்டுநிதி எல்லலையாகிய ரூபா 20,000 ஐ விஞ்சும் விதத்தில் ரூபா 228,000 கூட்டுத்தொகையுடைய செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

---------------------------------------

இரண்டு ஆண்டுகளைக் கடந்திருந்த ரூபா 12,535,034 கூட்டுத்தொகையுடைய 32 வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

விடய இலக்கம் 13601 உடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கினது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தெரிவுச் செவ்வைக்குள்ளானபோது, அத் தினத்தில் உள்ளவாறு இட மாற்றம் பெற்றிருந்த, ஓய்வு பெற்றிருந்த, சேவை விலகியிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரையிலான ரூபா 451,335 கூட்டுத் தொகையுடைய கடன் மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### 3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-------------------------------------------------------------

#### 3.7.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

---------------------------------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் அமைச்சு தயாரித்திருந்த வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மூலதனச் செலவினம் தொடர்பான விபரம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம், விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகத்திற்கு ரூபா 83.72 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அது ரூபா 58.73 மில்லியனாக ரூபா 25 மில்லியன் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அமைச்சின் நிர்வாக மற்றும் தாபனச் சேவைகளுக்கு ரூபா 727.57 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும்,

செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அது ரூபா 227.58 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.7.2 உள்ளகக் கணக்காய்வு

----------------------------------------

வருடாந்த மதிப்பீட்டில் அமைச்சிற்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 1,210,320,000 ஆகும். அமைச்சிடம் ரூபா 212,336,744 கூட்டுத்தொகையான சொத்துக்கள் இருந்தன. எனினும், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுக் கூறினால் போதியளவு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.8 தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

-----------------------------------------------------------

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்த்து வைக்கப்படாத ஓராண்டிற்குக் குறைவான பொறுப்பு ரூபா 95,473,193 ஆகும். செலவின விடயம் 9 உடன் தொடர்புடைய ரூபா 36,220,788 கூட்டுத்தொகையுடைய தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள் மீளாய்வாண்டினது ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 3.9 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை

------------------------------------------------------------------------------

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| XV அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | 698,660 | விமானப் பயணங்களின்போது சகல உத்தியோகத்தர்களும் சிக்கன வகுப்புகளில் பயணஞ் செய்ய வேண்டிய போதும், அதற்கு முரணாக வர்த்தக வகுப்பிற்கான வானூர்திப் பயணச்சீட்டுக்கள் பெறப்பட்டிருந்தன. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

---

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 103(I) | | வாகன விபத்துக்களின்போது குறித்த உத்தியோகத்தர்கள் பொலிசுக்கு அறிவித்தமை தொடர்பான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், நட்டங்கள் மற்றும் இழப்புகளுக்கான பதிவேட்டில் அவை பதிவு செய்யப்படவுமில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 22,480,768 | 2010 முதல் 2014 வரையிலான 06 மாத காலத்தைக் கடந்து விட்ட 65 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 880 | - | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அவற்றைப் பெறுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1646 | - | வாகனக் குழாமிலுள்ள வாகனங்களுக்குத் தயாரிக்கப்பட வேண்டிய நாளாந்த ஒட்ட அட்டவணைகளும் மாதாந்த செயற்பாட்டுப் பொழிப்புகளும் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | வாகனங்களதும் அவற்றினது உபகரணங்களதும் பொருட் கணிப்பை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 1647(உ) | - | அமைச்சிற்குச் சொந்தமான 03 வாகனங்கள் மோட்டார் வாகனப் பதிவேட்டிலிடப்படவில்லை. |

(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

---

| | | | |
|---|---|---|---|
| (i) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் | - | ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் நுகர்வு பரீசீலிக்கப்பட வேண்டுமாயினும், 41 |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கச் சுற்றிக்கையின் 2.2.11 ஆம் பந்தி | | வாகனங்களது விடயத்தில் சுற்றறிக்கைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) | 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | அமைச்சினது வாகனங்களில் அரச இலச்சினையைப் பொறிப்பதற்குப் புறம்பாக அமைச்சினது பெயரையும் குறிப்பிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | திறைசேரிச் சுற்றறிக்கை<br>-------------------------------------- | | |
| (i) | 2014 சனவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றிக்கையின் 5 ஆம் பந்தி | 822,000 | சரீர சுகவாழ்வுக் கூறினால் 2014 ஜுலை 30 முதல் 2015 மே 18 வரை சேகரிக்கப்பட்ட பதிவு மற்றும் மாதாந்தக் கட்டணம் ஒருங்கிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்படாது வைப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது. |
| (ii) | 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | 1,425,660 | வெளிநாட்டுப் பணனங்களுக்கான விமானப் சீட்டுக்களின் கொள்வனவும் அவற்றினது நடவடிக்கைகளும் சகல சந்தர்ப்பங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளிலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக, தனியார் கம்பனிகளிலிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (உ) | சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை<br>-------------------------------------- | | |
| | 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்கச் சுற்றிக்கை | | |
| | 3.1 ஆம் பந்தி | - | அமைச்சருக்கு ஆகக்கூடியது 3 வாகனங்களே ஒதுக்கப்படாலாமெனினும், 9 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. |
| | 5.7 ஆம் பந்தி | 100,000 | அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி மேலதிக எரிபொருளுக்காக நிதி செலவிடப்பட்டிருந்தது. |

## 3.10 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

பாதீட்டு நிதியேற்பாடின்றியும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் எதனையும் பின்பற்றாதும் விளையாட்டுக் கழகங்களுக்கிடையே விநியோகிக்கப்படுவதற்காக ரூபா 39,061,290 கூட்டுத்தொகையுடைய 14,000 கெரம் பலகைகளும் காய்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றைப் பெற்றுக்கொண்டதாக களஞ்சியப் பொறுப்பாளர் கைச்சாத்திட்டு சான்றுறுதி வழங்கியிருந்தபோதும், அப் பொருட்கள் நேரடியாகப் பரீசீலிக்கப்பட்டுப் பதிவேடுகளில் பதியப்படவில்லை.

## 3.11 சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள்

---

அமைச்சு 2014 திசெம்பர் மாதத்திற்கெனத் தயாரித்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கல் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் புலனாகிய தகவல்கள் வருமாறு

| | சீராக்கல் தொடர்பான விபரம் | காலப் பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 ஆண்டிற்குக் குறைவு | 01 ஆண்டிற்கு மேல் 03 ஆண்டுகளுக்குக் குறைவு | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் காசோலைகள் | 246,401 | 5,125 | 251,526 |
| (ii) | இனங்காணப்படாத செலவுகள் | 150,359 | - | 150,359 |

## 3.12 நட்டங்களும் இழப்புகளும்

---

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது புலனாகிய நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு

(அ) வாகனமொன்று விபத்திற்குள்ளாகியதையடுத்து அதனைத் திருத்துவதற்கு ரூபா 355,816 செலவிடப்பட்டிருந்தது. அவ்விழப்பு தொடர்பாக நிதிப்

பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) வாகன விபத்துகளுக்குரிய பழுதுபார்த்தலுக்குரிய விலைப்பட்டியல்கள் காப்புறுதி நிறுவனங்களால் மீள நிரப்பப்படும்போது, குறித்த கொடுக்கல் வாங்கல்கள் அமைச்சின் கணக்குகளில் இடப்படாது மீளளிப்புக்கான காசோலைகள் நேரடியாகவே பழுதுபார்த்தல் நிறுவனத்தின் பெயரில் வரையப்பட்டிருந்தன.

(இ) 2014 சனவரி மாதம் அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் இணைக்கப்பட்டிருந்த அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரது 2014 ஏப்ரல், மே, ஜுன் மாதங்களுக்கான சம்பளம் தொடர்பாக அமைச்சு கொடுப்பனவு செய்திருந்த ரூபா 141,312 தொகையானது 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதியளவிலும் மீளளிக்கப்படாதிருந்தது.

**3.13 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை வருமாறு

| | ஊழியர் வகை | அங்கீகரித்த எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 17 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 97 | 71 | 26 |
| (iv) | ஆரம்ப நிலை | 77 | 70 | 07 |
| | மொத்தம் | 205 | 163 | 42 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விளையாட்டுத்துறை நிறுவகத்தின் மருத்துவ ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கென அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 02 ஆகும். எனினும், பதவியில் இருந்தோர் மூவர் ஆவர்.

(ii) 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையினது 2 ஆம் பந்திக்கு முரணாக அமைச்சின் பதவியணிக்கு மேலதிகமாக 04 ஊடகப்பிரிவு உத்தியோகத்தர்களது சம்பளமாக அமைச்சினால் ரூபா 1,204,480 செலவிடப்பட்டிருந்தது.

(iii) விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனிதவளம்

---------------------------------------------------------------------------------------

அமைச்சு சுகததாச தேசிய விளையாட்டுப் பல் கூட்டுத்தொகுதி அதிகார சபையிலிருந்து பெற்றுக்கொண்ட மனிதவளம் தொடர்பாகப் புலனாகிய விடயங்கள் வருமாறு

| **ஊழியர் வகை** | **எண்ணிக்கை** | **காலப் பகுதி** |
|---|---|---|
| பாதுகாப்புக் காவலாளி | 01 | 2014.04.01 முதல்<br>2015.01.13 வரை |
| சிற்றூழியர் | 01 | 2012.03.19 முதல்<br>2015.01.13 வரை |
| முகாமைத்துவ உதவியாளர் | 01 | 2012.11.06 முதல்<br>2015.01.13 வரை |
| சாரதி | 01 | 2013.11.13 முதல்<br>2014.08.14 வரை |

(இ) கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் சபையின் சாரதி ஒருவர் 2010 ஒக்டோபர் முதல் 2015 ஜூன் வரை விளையாட்டுத்துறை அமைச்சின் பதவியணியில் இணைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின்போது அவரது சம்பளமும் படியுமாக முறையே ரூபா 345,996 மற்றும் ரூபா 130,702 என்பன அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

## 4. தலைப்பு 219 – விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்

### 4.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

திணைக்களம் பின்வரும் சில பதிவேடுகளைப் போணாததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட்டிராமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| **(அ)** | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை. |
| (ஆ) | கணணி, துணைப்பாகங்கள், மென் அணிப் பதிவேடு | 2010 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை. |
| (இ) | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களது பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்படவில்லை. |
| (ஈ) | மின்சார உபகரணப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்படவில்லை. |
| (உ) | பொறுப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்படவில்லை. |
| (ஊ) | கொள்வனவுக் குழுவின் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.11.2 | பேணப்படவில்லை. |
| (எ) | கொள்வனவுக் குழுக் கூட்ட அறிக்கைகள் | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.11.3(அ) | பேணப்படவில்லை |

| | | |
|---|---|---|
| (ஏ) | கடன் மற்றும் முற்பணப் பதிவேடு | 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படவில்லை |

**4.2 கணக்காய்வுக்கான சான்றின்மை**

---

மாபெரும் தேசிய விளையாட்டு விழா XL தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய பதவியணியினருக்கும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக சங்கம் ஒன்றிற்கு ரூபா 588,672 வழங்கப்பட்டபோதும், கொடுப்பனவிற்கான விலைப் பட்டியல்கள் மற்றும் குறித்த உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரம் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**பாதீட்டு முரண்**

---

திணைக்களத்தின் மீளாய்வாண்டிற்கான கொடுப்பனவுக்கான கட்டுநிதி எல்லைகள் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் எதிர்பார்க்கப்பட்டவாறான கட்டுநிதியை திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களம் திணைக்களத்திற்கு வழங்கியிருக்காமை மற்றும் தேவைகளைத் தெளிவாக இனங்காணாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டமை என்பன காரணமாக பின்வரும் 38 செலவின விடயங்களுக்கும் வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி 10 முதல் 100 சதவீதம் வரை பயன்படுத்தப்பட முடியாது போயிற்று

**4.4 கட்டுநிதிக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் ஒரு நிறைவேற்றுதர உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் வழங்கப்படக் கூடிய அதி கூடிய செயல் நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 ஆகும். எனினும், அதற்கு முரணாக 15 சந்தர்ப்பங்களில் 03 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 ஐவிடக் கூடிய ரூபா 2,041,636 கூட்டுத் தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்பார்த்த செலவினத்தின் பொருட்டு முறையான மதிப்பீடு இல்லாது முற்பணம் வழங்கப்பட்டமையால், உத்தியோகத்தர்கள் முற்பணத்திலும் கூடுதலாகச் செலவழித்த ரூபா 274,417 செலவினமானது திணைக்களத்தால் மீளளிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 372 இன் பிரகாரம் கட்டுநிதி மற்றும் உப கட்டுநிதி யாவும் மாத முடிவில் கணக்கிணக்கஞ் செய்யப்பட வேண்டிய போதும், திணைக்களம் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் பிரகாரம், திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதி ரூபா 20,687 ஆகும். எனினும், ஒதுக்கீட்டுக் கணக்கில் அது ரூபா 108,672 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மீதிகள் எவ்வாறு கூட்டுச் சேர்ந்தன என்பதும் காண்பிக்கப்படவில்லை.

## 4.5 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளது மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 167,373,462 ஆகும். அதில் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 62,695,278 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 565(5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் பொருட்டும் பொதுப் படிவம் 71 இன் கீழ் தயாரிக்கப்படும் மாதாந்தக் கணக்குப் பொழிப்பானது அடுத்து வரும் மாத இறுதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி அச்சீட்டுப் பிரதியின் பிரகாரம் பொது வைப்புக் கணக்குகளது மீதி ரூபா 167,373,462 ஆக ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்ததுடன் தனிப்பட்ட மீதிகளது நிரலின் பிரகாரம் மீதி ரூபா 164,657,501 ஆகும். அதன் பிரகாரம், அவ்விரண்டு மீதிகளுக்கிடையே ரூபா 2,715,961 வேறுபாடு நிலவியது.

## 4.6 உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விடய இலக்கம் 21901, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின்போது அத்தினத்தில் உள்ளவாறு ஓய்வு பெற்ற, மரணமடைந்த, சேவை விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக இருந்த மீதி ரூபா 360,663 கூட்டுத்தொகை ஆகும். அந்த நிலுவை மீதிகள் 01 முதல் 02 ஆண்டுகளாக இருந்து வந்தபோதும், அவற்றை அறவிடுவதிலான தொடர் நடவடிக்கைகள் நலிவடைந்திருந்தன.

(ஆ) கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களத்திலிருந்து விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர் ஒருவரது ரூபா 128,152 கடன் மீதியானது 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி தீர்த்து வைக்கப்பட்டிருந்தபோதும், அதற்குரிய கடன் தவணைப் பணம் எதுவுமே உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) இட மாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர் ஒருவரது கடன் தவணைப் பணம் 2012 பெப்ரவரி மாதம் முதல் அறவிடப்பட்டிருந்தபோதும், மாதாந்தம் அதனை அனுப்பி வைக்காது மொத்தக் கடன் தொகையான ரூபா 90,460 ஒரே தடவையில் மாகாண சபைக்குத் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், குறித்த கடன் மீதியானது அங்கத்தவர் கடன் பதிவேட்டில் சேர்த்துக் கொள்ளப்படவுமில்லை.

(ஈ) திணைக்களத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களது தனிப்பட்ட மீதி மற்றும் ஊழியர் கடன் பதிவேடு என்பவற்றுக்கிடையே ரூபா 579,800 வேறுபாடு காணப்பட்டது.

**4.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**4.7.1 வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம்**

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்திருந்தபோதும், மூலதனச் செலவினங்களுக்குரிய செயற்திட்டங்கள் தொடர்பான விபரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

**4.7.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

---

2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் விபரமாகத் தயாரிக்கப்படவில்லை.

**4.7.3 உள்ளகக் கணக்காய்வு**

---

திணைக்களத்திற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 2,254.16 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திணைக்களத்தில் உள்ள பதவியணியினரின் எண்ணிக்கை 324 ஆகும். மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,047.75 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் இருந்தபோதும் உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு கூறு உள்ளகக் கணக்காய்வை மேற்கொண்டிருந்தபோதும், அது போதுமானதாக இல்லை.

**4.8 சொத்து முகாமைத்துவம்**

---

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஒக்டோபர் 17 ஆந திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொருட் கணிப்பை மேற்கொண்டு அவ்வறிக்கைகளை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், 2015 மே 31 ஆந் திகதியளவிலும் அவ்வறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

-----------------------------------------------------------

திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகளது கூட்டுத்தொகை ரூபா 491,689,055 ஆகும். இது ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**4.9 இணங்காமை**

**-------------------**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **(அ)** | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை** | **பெறுமதி** | **இணங்காமை** |
|---|---|---|---|
| | **---------------------------------------------------** | **-------------** | **----------------------------** |
| | | **ரூபா** | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் -------------------------------------------------------- | | |
| | (i) நிதிப்பிரமாணம் 880 | - | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்யவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 1645 (அ) | - | வாகனச் சம்பவப் பதிவேடுகள் நாளது வரையாக்கப்படவில்லை |
| | (iii) நிதிப்பிரமாணம் 1646 | - | திணைக்களக் குழாமில் உள்ள வாகனங்களது நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | (iv) நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | வாகனங்களதும் அவற்றினது உபகரணங்களினதும் பொருட் கணிப்பை |

| | | |
|---|---|---|
| | | நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>--------------------------------------------- | | |
| 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் சற்றிறிக்கையின் 2.2.11 ஆம் பந்தி | | திணைக்களத்தின் 21 வாகனங்கள் சம்பந்தமாக 6 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் நுகர்வு பரீசீலிக்கப்படவில்லை. |
| (இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை<br>-------------------------------------------- | | |
| (i) 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 9,643,850 | வெளிநாட்டுப் பயணத்திற்கான விமானப் பயணச்சீட்டுக்கள் எப்பொழுதுமே அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளிடமிருந்து பெறப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக, தனியார் கம்பனிகளிலிருந்து குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) 2013 சனவரி 03 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2013 சனவரி 05 ஆந் திகதிய PCMD/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | - | திணைக்களத்தில் நெடுங்காலமாகப் பாவனையில் இல்லாதிருக்கும் 03 வாகனங்களைத் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 4.10 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்கல்

---------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீட்டைத் தயாரிக்கும்போது சகல மாவட்டங்களையும் உள்ளடக்குமாறு பாதீட்டு முன்மொழிவு தயாரிக்கப்பட்டிருந்தபோதும், கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதியேற்பாடாகிய ரூபா 19.7 மில்லியனும் 03 மாவட்டங்களுக்கே

செலவிடப்பட்டிருந்தன. ஏனைய 22 மாவட்டங்களில் அம் முன்மொழிவு எதுவுமே அமுலாக்கப்படவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல், மாவட்டப் பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்தல், கிராமிய விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச மட்டத்திலான வசதிகளை வழங்குதல், பாடசாலை அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் மாகாண மாவட்ட விளையாட்டு பல் கூட்டுத் தொகுதிகளை நிர்மாணித்தல் என்பவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 1,220 மில்லியன் ஆகும். இதில் 70 சதவீதம் கண்டி மாவட்டத்திற்கு ஓதுக்கப்பட்டமையானது விளையாட்டுத்துறையை தேசிய மட்டத்தில் கட்டியெழுப்புவதற்கு சாதகமற்றவாறு அமைந்திருந்தது.

(இ) விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் 45 வேலைகளை நிறைவேற்றுவதற்கென 11 மாவட்டங்களில் உள்ள மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 51,127,833 விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களச் செலவினமாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், குறித்த வேலைகள் திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உட்படாததுடன் தொழில்கள் தொடர்பான எதுவித கோவைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தொழில்கள் நிறைவேற்றப்பட்டமை குறித்து மாவட்டச் செயலாளர்களும் உறுதி செய்திருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டினது வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 219-02-02-12-2104 செலவின விடயத்தின் கீழ் 04 பாடசாலைகளது அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 32,000,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்படாத செயற்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின்போது ரூபா 17,018,303 செலவிடப்பட்டிருந்தது.

(உ) விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 3,208,282,018 பெறுமதியான 57 வேலைகள் 1 முதல் 3 ஆண்டுகளாக தொடர்ந்தவாறிருந்தன.

(ஊ) 2014 சனவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 2014-2016 மத்திய காலப் பகுதிக்கான செலவின அமைப்பிற்குள் அரச முதலீடுகள் கருத்திற் கொள்ளப்பட்டு 2014 ஆம் ஆண்டிற்குத் தேவையான நிதி ஏற்பாடு மாத்திரம்

2014 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செயலினமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டிற்கென ஏற்பாடு செய்த நிதிக்குப் புறம்பாக எதுவித கொடுப்பனவும் செய்யப்படலாகாது என அறிக்கையிடப்பட்டிருந்தபோதும், அதற்கு முரணாக, 219-02-02-17-2104 ஆம் செலவின விடயத்தின் கீழ் (மாகாண மற்றும் விளையாட்டுத்துறைக் கூட்டுத்தொகுதிகளை நிர்மாணித்தல்) உள்ள நிதி ஏற்பாட்டின் மூலம் அமைச்சின் புதிய கட்டிட நிர்மான வேலைகளுக்கும் மின் உற்பத்தி சாதனம் ஒன்றும் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 49,876,212 செலவிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 9,963,876 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மின் உற்பத்திச் சாதனம் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறித்துக் கொள்ளப்படாதுமிருந்தது.

## 4.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய இலங்கையைச் சேர்ந்த பாரந்தூக்கும் சங்க விளையாட்டு வீரர்களுக்கு விமானப் பயணச் சீட்டுக் கட்டணமாக ரூபா 234,666 ஐ 2010 ஜுலை மாதம் விமானப் பயணச் சீட்டின் அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்திருந்தது.

## 4.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

திணைக்களம் ஈடுபட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவாறிருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் வருமாறு.

(அ) கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளிலிருந்து விலகியமை

---

திணைக்களம் மேற்கொண்ட கொள்வனவுகள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாபெரும் தேசிய விளையாட்டு விழா XL பதவியணியினருக்கு தங்குமிட வசதிகளளிப்பதற்கு 17 நிறுவனங்களுக்கு ரூபா 2,589,494 மற்றும் விளையாட்டு விழாவில் கலந்து கொண்ட வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களுக்கிடையே விநியோகிக்கப்படுவதற்காக 3500

பிரயாணப் பைகள் மற்றும் 3500 டீசேர்ட்கள் என்பன ரூபா 4,970,380 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், குறித்த வழங்குநர்கள் 2006 ஆம் ஆண்டின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் கூறுவிலைகள் கோரப்பட்டுத் தெரிவு செய்யப்படவில்லை.

(ii) தாபன விதிக் கோவை ஏற்பாடுகள் மற்றும் 6/2006 ஆம் இலக்க சம்பளச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளிலிருந்து விலகியவாறும் கடமை சம்பந்தமான விதிமுறைகளுக்கு முரணாகவும் திறைசேரியின் விசேட அங்கீகாரம் இன்றி மாபெரும் தேசிய விளையாட்டு விழாவின் போது உத்தியோகத்தர்களுக்குத் தங்குமிட வசதிகளும் உணவு, பானம் என்பவற்றிற்கான செலவுகளும் சிக்கனமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) 2014 பெப்ரவரி 12 ஆந் திகதியன்று விளையாட்டுச் சங்கம் ஒன்று விண்ணப்பித்துக்கொண்டதற்கு ஏற்ப 15 வொலிபோல் பந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தபோதும், போட்டிக் கூறு விலைகளின்றி ரூபா 140,250 செலவழிக்கப்பட்டு 20 வொலிபோல் பந்துகள் தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iv) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.7.5, 2.8.1, 4.2 என்பவற்றில் உள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் முறையே கொள்வனவுக்குழு, தொழில்நுட்ப ஆய்வுக்குழு என்பன நியமிக்கப்படாதும் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்படாதும் நிதிப்பணிப்பாளர் (விளையாட்டு) மற்றும் வொலிபோல் பயிற்றுவிப்பாளர் ஒருவரது சிபார்சின் பேரில் திணைக்களம் ரூபா 13,812,500 செலவில் விளையாட்டுத்துறைக்கான பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள்

---------------------------------------------------------------

மாபெரும் தேசிய விளையாட்டு விழா XL தொடர்பாக 24 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 7,873,104 அங்கீகாரமின்றியும் கொடுப்பனவு உறுதிச் சீட்டின் மீது செலவுகளை மேற்கொள்வதற்கு முன்பே ''அங்கீகரிக்கப்பட்டுள்ளது'' எனும் முத்திரையுடனும் பணிப்பாளர் நாயகத்தின் கையெழுத்தினடிப்படையில் நடைபெற்றிருந்தன.

**4.13 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகள்**

**வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிப்பதில் நீண்ட தாமதம்**

2015 ஜுலை 31 ஆந் திகதியளவிலும் 01 வங்கிக் கணக்கினது வங்கிக் கணக்கிணக்கம் 2014 ஆகஸ்ட் முதல் 2015 ஜுன் வரை தயாரிக்கப்படாதிருந்தது.

**4.14 நட்டங்களும் இழப்புகளும்**

இலங்கை கராட்டே சங்கத்தினால் உலக கராட்டே சங்கத்தின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான அங்கத்துவம் மற்றும் தேசிய ரைபள் சங்கத்தால் International Practical Shooting Confederation என்பவற்றின் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான அங்கத்துவத்தைக் குறித்த தினங்களில் பெறாமையால் தண்டப்பணமாக முறையே ரூபா 111,336 மற்றும் ரூபா 27,406 என்பன திணைக்களத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.15 முகாமைத்துவ நலிவுகள்**

மீளாய்வாண்டின்போது திணைக்களம் விளையாட்டுச் சங்கங்களுக்கு ரூபா 79,988,392 ஐ வழங்கியிருந்தபோதும், செலவானது அரசாங்க சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கிணங்க செலவிடப்பட்டமை மற்றும் நிதிப் பயன்பாட்டின் பலன் என்பன குறித்த செயன் முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கு திணைக்களம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**4.16 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி என்பன பின்வருமாறு இருந்தது. மீளாய்வாண்டு முடிவளவில் இருந்த 95 வெற்றிடங்களை நிரப்புவதற்குத் திணைக்களம் தவறியிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 05 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 254 | 185 | 69 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 49 | 03 | - |
| (v) | ஒப்பந்த அடிப்படை | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 324 | 243 | 84 | 03 |

## 5. விளையாட்டுச் சங்கங்கள்

### 5.1 இலங்கை கால்பந்து சம்மேளனம்

#### 5.1.1 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) களுத்துறை விளையாட்டரங்கை மீண்டும் புதுப்பிப்பதற்காக இத்தாலி கால்பந்து விளையாட்டு வீரர்களது சங்கத்திலிருந்து இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 6,287,670 தொகைக்குச் சமமான 40,400 யூரோ நன்கொடையானது சம்மேளனத்தின் முகாமைத்துவக் குழுவினது முன்னாள் தலைவரால் மோசடியாகப் பெறப்பட்டிருந்தது.

(ஆ) கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் வெற்றி விருதுப் போட்டியின் ஆரம்பச் சுற்றின் தகைமையைப் பெறும் போட்டிகளை நடாத்துவதற்காக ஆசிய கால்பந்து சம்மேளனத்திடமிருந்து இலங்கை கால்பந்துச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,415,290 இற்கு நிகரான 60,000 அமெரிக்க டொலர் நல்லிணக்க உதவி, சம்மேளனத்தின் முன்னாள் முகாமைத்துவக் குழுத் தலைவரால் மோசடியாகப் பெறப்பட்டிருந்தது.

(இ) சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்பிற்குள்ளான களுத்துறைப் பிரதேசத்தின் 20 வீடுகளை நிர்மாணிப்பதற்கு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்று இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு வழங்கிய ரூபா 10,000,000 நன்கொடையில் ரூபா 5,000,000 சம்மேளனத்தின் முன்னாள் முகாமைத்துவக் குழுத் தலைவரால் மோசடியாகப் பெறப்பட்டிருந்தது.

(ஈ) ஆசிய கால்பந்து சம்மேளனத்தால் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு வழங்கப்பட்ட 200,000 அமெரிக்க டொலரில் 40,000 அமெரிக்க டொலர்கள் முன்னாள் முகாமைத்துவக்குழுத் தலைவரால் மோசடி செய்யப்பட்டிருந்தது. மேலும், முன்னாள் பிரதான நிறைவேற்றுதர உத்தியோகத்தரால் 2008 ஜுன் 06 ஆந் திகதியன்று சம்மேளனத்தின் வங்கிக் கணக்கிலிருந்து பற்றுதல் செய்யப்பட்ட ரூபா 3,217,500 இற்கு நிகரான 30,000 அமெரிக்க டொலர்களில் ரூபா 1,337,035 இற்கு நிகரான 12,533 அமெரிக்க டொலர்கள் 2015 ஜனவரி 19 ஆந் திகதியளவிலும் சம்மேளனத்திடம் ஒப்படைக்கப்படாதிருந்தது.

(உ) மேலும், நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் இல்லாது சம்மேளனத்தில் வங்கிக் கணக்கில் போதிய நிதி மீதி இருக்கையில் சம்மேளனத்தின் முன்னாள் பிரதான நிறைவேற்றுதர உத்தியோகத்தர் 2008 ஜுன் 20 ஆந் திகதியன்று முன்னாள் முகாமைத்துவக் குழுத் தலைவரிடமிருந்து ரூபா 6,000,000 கடனாகப் பெற்றிருந்ததுடன் குறித்த கடனைச் செலுத்துவதற்கு சம்மேளன வங்கிக் கணக்கிலிருந்து 60,000 அமெரிக்க டொலர்களை முன்னாள் முகாமைத்துவக் குழுத் தலைவரது பிரத்தியேக கணக்கிற்கு மோசடியான வங்கிக் கட்டளை மூலம் மாற்றஞ் செய்திருந்தார்.

(ஊ) தாய்லாந்து கால்பந்து சம்மேளனம் இலங்கை கால்பந்துச் சம்மேளனத்திற்கு நன்கொடையாக வழங்கிய 5,717 கால் பந்துகள் பெறுமதியிடப்பட்டு கணக்கிற்குக் கொண்டுவரப்படவில்லை.

(எ) பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் தீர்த்து வைக்காத முற்பண மீதி ரூபா 1,523,312 ஆகும். உப பதிவேடுகளின் பிரகாரம் அது ரூபா 3,349,250 ஆகும். அதற்கமைய, வேறுபாட்டிற்கான காரணத்தைக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 224,141,484 கூட்டுத் தொகையுடைய 25 கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள், கையிருப்புப் பதிவேடுகள், பொருட்களைப் பெறுவது, வழங்குவது தொடர்பான பத்திரங்கள், விலைப்பட்டியல், பற்றுச்சீட்டுக்கள், நாட்குறிப்புகள்

உறுதிச்சீட்டுக்கள், ஆவணங்கள், நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம், மீதிகளை உறுதிப்படுத்தல், நிலையான வைப்புச் சான்றிதழ்கள், செலவின விபரம், ஒப்பந்த உடன்படிக்கைகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அம்மீதிகளைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ஐ) குத்தகைச் சொத்துக்களின் பெறுமதி, குத்தகைக்கான உடன்படிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை. அதன் காரணமாக, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 161,243,752 தொகைக்கான குத்தகைச் சொத்துக்களது புத்தகப் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின்போது பதிவழிக்கப்பட்ட குத்தகைச் சொத்தான ரூபா 7,208,008 என்பன சரியானவையா என்பதை உறுதி செய்வதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஒ) சம்மேளனம் நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணவில்லை. நிதிக் கூற்றுக்களில் காணப்படும் நிலையான சொத்துக்களது உரித்து, அவை உள்ளமை மற்றும் அவற்றின் பெறுமதியை உறுதி செய்வதற்கான உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பன அநேக ஆண்டுகளாகக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்தப் பொருள் கணிப்பு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான முடிவில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 98,080,678 பெறுமதியுடைய சொத்துக்களை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்வதற்கு கணக்காய்வால் இயலவில்லை.

(ஓ) கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| **சட்டங்கள், விதிகள், பிரரமாணங்களுடன் இணங்காமை** | **இணங்காமை** |
| --- | --- |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| • நிதிப்பிரமாணம் 446(3) | சில்லறைக் காசேடு நாளது வரையாக்கப்படவில்லை. |

- நிதிப்பிரமாணம் 751 — கையிருப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை.

- நிதிப்பிரமாணம் 756 — வருடாந்தப் பொருட் கணிப்பு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

---------------------------------------------------

| | |
|---|---|
| 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பயணங்களுக்காக விமானப் பயணச்சீட்டு பத்திரங்களை அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளில் பெறாது ஏனைய தனியார் கம்பனிகளில் ரூபா 3,830,300 கூட்டுத்தொகையுடைய விமானப்பயணச் சீட்டுக்கள் சம்மேளனத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

------------------------------------------------

| | |
|---|---|
| 1999 ஒக்டோபர் 08 அந் திகதிய 22/99 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சம்மேளன உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறுகையில் சம்மேளனத்திற்குரிய மோட்டார் வாகனத்தை தம்முடன் எடுத்துச் சென்றிருந்தார். |

(ஔ) பதவியணியை அங்கீகரித்தல், ஆட்சேர்த்தல், பதவி உயர்வு ஆகியவற்றிற்கான விதிமுறைகளைத் தயாரித்து அங்கீகரித்திராமை, நிறுவன அமைப்பைத் தயாரித்து அதனை அங்கீகரித்துக் கொள்ளாமை மற்றும் பெயர்வழிக் கோவைகளை நாளதுவரையாக்காமை ஆகிய காரணங்களால் இலங்கை கால்பந்து சம்மேளனம் வினைத்திறனுடன் கூடிய மனிதவள முகாமைத்துவத்தை 2014 ஆம் ஆண்டு முடிவளவிலும் ஸ்தாபித்துக் கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(க) சராசரி மாதாந்த மீதியாகிய ரூபா 9,084,332 மீளாய்வாண்டின்போது சம்மேளனத்தால் பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தப்படாது நான்கு நடைமுறைக் கணக்குகளில் இருந்தன.

(கா) 2014 ஆம் ஆண்டு இறுதியளவிலும் சம்மேளன முகாமைத்துவம் கையிருப்புக் கட்டுப்பாடு சம்பந்தமாகப் பொருத்தமான கட்டுப்பாட்டு முறையை நிறுவியிருக்காததுடன், பல்வேறு அமைப்புக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட விளையாட்டுத்துறை விடயங்கள் மற்றும் பொருட்களுக்குரிய கையிருப்புப் பதிவேடுகள் எதுவுமே பேணப்படவில்லை. மேலும், கொள்வனவுகள் தொடர்பாகப் பொருத்தமான கட்டுப்பாட்டு நடைமுறைகள் சம்மேளனத்தால் அறிமுகஞ் செய்து வைக்கப்படாமையால் அநேக சந்தர்ப்பங்களில் தனிப்பட்டோரினால் நேரடியாகவே பொருட்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்பட்டு கொடுப்பனவிற்கான விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(கி) ஊழியர் கடன் தொடர்பாக நிலவும் நலிவான உள்ளகக் கட்டுப்பாட்டு காரணமாக மீளாய்வாண்டின்போது ஊழியர் கடனாகிய ரூபா 485,000 நட்டக்கடனாகப் பதிவழிக்கப்பட வேண்டியேற்பட்டிருந்தது.

(கீ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் நலன்புரி முன்மொழிவின்றி சம்மேளனம் மீளாய்வாண்டின்போது உத்தியோகத்தர் ஒருவரது வைத்தியசாலைக் கட்டணத்தை ஈடு செய்வதற்கு ரூபா 1,591,439 செலவு செய்திருந்தது.

(கு) போட்டியுடனான கூறுவிலைகள் கோரப்படாதும், நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரமின்றியும் தலைமை அலுவலகச் சிற்றுண்டிச் சாலையை 2003 ஆம் ஆண்டில் தனியார் தரப்பினருக்கு ரூபா 40,000 மாதாந்த வாடகைக்குச் சம்மேளனம் வழங்கியிருந்தது. அவ்வுடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் எழுத்துமூல உடன்படிக்கையோ அல்லது மாதாந்த வாடகை மீளாய்வு செய்யப்பட்டோ இராது 2012 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் அந்த ஒப்பந்தக்காரரே சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தக்காரர் 2 முதல் 3 மாதங்கள் தாமதித்தே வாடகையைச் செலுத்தியிருந்தார்.

(கூ) போட்டியுடனான கூறு விலைகள் கோரப்படாமலும் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரமின்றியும் விளையாட்டுக் குழுக்களுக்கும் ஏனையோர்க்கும் உணவு, பானம் என்பவற்றை வழங்கும் ஒப்பந்தமானது எழுத்துமூல உடன்படிக்கை இல்லாது தனியார் தரப்பினருக்கு ஒருவரிடம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் உணவு, குடிபானங்களை வழங்கியமைக்காக அந்த ஒப்பந்தகாரருக்கு ரூபா 7,008,390 வழங்கப்பட்டிருந்தது.

(கெ) உத்தியோகத்தர்களுக்கு முற்பணத்தை வழங்கும்போது பொருத்தமான நடைமுறைகளைச் சம்மேளனம் அங்கீகரித்திருக்கவில்லை. அதன் காரணமாக, 2012 சனவரி முதல் ஜுன் வரையான காலப்பகுதியின்போது 6 உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் முன்னைய முற்பணங்களைத் தீர்த்து வைக்காதிருந்தபோதும், ரூபா 3,825,920 கூட்டுத்தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

(கே) எட்டுச் சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 1,523,312 முற்பணமானது 2013 மே 08 வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை மேலும், ரூபா 2,315,000 கூட்டுத்தொகையுடைய முற்பணம் 11 முதல் 47 நாட்கள் தாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

(கை) சம்மேளனம் 2014 இறுதியளவிலும் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை. மீளாய்வாண்டின்போது எய்தக்கூடிய நோக்கங்களையும் இலக்குகளையும் இனங்கண்டவாறும் முகாமைத்துவத்தின் பொறுப்பை உணர்த்தியவாறும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(கொ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைப் பிரகாரம் இலங்கை கால்பந்து சம்மேளனம் 2014 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்றினை ஸ்தாபித்திருக்கவில்லை.

(கோ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் சம்மேளனம் 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை. மீளாய்வாண்டின்போது சம்மேளனம் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு முறையே ரூபா 1,713,150 மற்றும் ரூபா 1,689,783 எனச் செலவு செய்திருந்தது.

**5.1.2 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்**

---

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66,512,630 கூட்டுத்தொகையுடைய 09 கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பொருட் பெறுவனவு மற்றும் வழங்கல் பத்திரங்கள், விலைப்பட்டியல், பற்றுச்சீட்டுக்கள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் உறுதி செய்தற்கான ஆவணங்கள், நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரம், மீதிகளை உறுதிப்படுத்தல் மற்றும் நிலையான வைப்புச் சான்றிதழ் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அம் மீதிகளைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) குத்தகை உடன்படிக்கைகளில் குத்தகைப் பெறுமதி குறிப்பிடப்படாமையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட ரூபா 156,110,770 குத்தகைச் சொத்துக்களது புத்தகப் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின்போது பதிவழிக்கப்பட்ட ரூபா 5,132,982 குத்தகைச் சொத்துக்களது பெறுமதி என்பன சரியானவையா எனக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியாதிருந்தது.

(இ) சம்மேளனம் நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணவில்லை. அத்துடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் நிலையான சொத்துக்களது உரித்து, அவை உள்ளமை மற்றும் பெறுமதி ஆகியவற்றை உறுதி செய்வதற்கான ஆவணங்களாக அநேக ஆண்டுகளாக பொருட்கணிப்பு அறிக்கைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 95,824,740 பெறுமதியான நிலையான சொத்துக்களது புத்தகப் பெறுமதியைக் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் மற்றும் முகாமைத்துவக் தீர்மானங்களுடன் இணங்காமை.

---

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| • நிதிப்பிரமாணம் 446(3) | சில்லறைக் காசேடு நாளது வரையாக்கப்படவில்லை. |
| • நிதிப்பிரமாணம் 751 | கையிருப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை. |
| • நிதிப்பிரமாணம் 756 | வருடாந்தப் பொருட் கணிப்பு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளில் அல்லாது தனியார் கம்பனிகளிலிருந்து சம்மேளனம் ரூபா 14,709,704 பெறுமதியான விமானப் பயணச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்திருந்தது. |

(உ) மீளாய்வாண்டின் போது சம்மேளத்தின் 39 ஊழியர்களது சம்பளமும் படியுமாக ரூபா 12,741,120 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. முன் அங்கீகாரமின்றி வேறு படிகளும் வழங்ப்பட்டிருந்ததுடன், அங்கீகாரம் மற்றும் நியமனக் கடிதம் என்பன இல்லாது 27 ஊழியர்களுக்கு ரூபா 810,000 சம்பள ஏற்றமாகவும் வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) முறையான அங்கீகாரமும் ஒப்பந்த உடன்படிக்கைகளுமின்றி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 37 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 8,548,080 படியாக செலவிடப்பட்டு அவர்களுக்கு அங்கீகாரமின்றி சம்பள ஏற்றமும் வழங்கப்பட்டிருந்தது.

(எ) போட்டியுடனான கூறுவிலைகளும் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரமும் இல்லாது சம்மேளனத்தால் பெத்தகான உடற் பயிற்சி நிலையத்தைத் தனி நபர்களுக்கு ரூபா 65,000 மாத வாடகைக்கு எழுத்துமூல உடன்படிக்கையின்றி வழங்கியிருந்தது.

(ஏ) போட்டியுடனான கூறுவிலைகளும் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரமும் இல்லாது சம்மேளனம் விளையாட்டுக் குழவினருக்கும் ஏனையோருக்கும் உணவு, குடிபானம் என்பவற்றை வழங்கும் ஒப்பந்தத்தை எழுத்து மூல உடன்படிக்கையின்றி தனியாருக்கு வழங்கியிருந்தது. மேலும், உணவு, பானங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு மீளாய்வாண்டில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 6,498,615 செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கமின்றி மிளாய்வாண்டில் சம்மேளனம் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வுக் கம்பனி ஒன்றிடம் கணக்காய்விற்கு வழங்கி கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 300,000 செலுத்தியிருந்தது.

(ஒ) சகல கொடுப்பனவுகளுக்கும் அதிகாரம், அங்கீகாரம் , சான்றுறுதி இருக்க வேண்டுமாயினும், 2013, 2014 ஆம் ஆண்டுகளில் முறையான அதிகாரம், அங்கீகாரம், சான்றுறுதி என்பன இல்லாது சில கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஓ) மீளாய்வாண்டின்போது எய்தக் கூடிய நோக்கங்களும் இலக்குகளும் இனங் காணப்பட்டு முகாமைத்துவத்தின் பொறுப்பைக் காட்டியவாறான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பலனுள்ள நிதிக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்காக சகல நிதி ஆண்டு ஆரம்பத்திற்கும் முன்னரே பாதீடு தயாரிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் பொருட்டு சம்மேளனம் பாதீட்டைத் தயாரித்திருக்கவில்லை.

(க) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டலின் பிரகாரம் சம்மேளனம் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

(கா) யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு சம்மேளனத்திற்கு ஜேர்மன் தூரகத்தால் ரூபா 8,264,500 நன்கொடை வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அதில் ரூபா 8,100,000 முற்பணமாக ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் இன்றி வழங்கப்பட்டிருந்தது. மேலும் அங்கீகரித்த திட்டம், மதிப்பீடு மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(கி) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரமின்றியும் விளையாட்டு மைதானம் ஒன்றை

கம்பஹாவில் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ஒப்பந்தக்காரரிடம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு முடிவளவில் சம்மேளனம் அதற்கு ரூபா 9,500,000 கொடுப்பனவு செய்திருந்தது. அந் நிர்மாண வேலைக்குரிய அங்கீகரித்த திட்டம், மதிப்பீடு மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.1.3 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

---

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாகப் பின்வருமாறு அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நான்கு சந்தர்ப்பங்களில் பெறப்பட்பட ரூபா 1,958,080 பெறுமதியான விளையாட்டுத்துறைப் பொருட்களும் ஏனைய பொருட்களும் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதிகளுக்கும் பேரேட்டு மீதிகளுக்குமிடையே ரூபா 69,331,951 வித்தியாசம் காணப்பட்டதுடன் அம் மீதிகள் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் ஆகிய ரூபா 1,795,000 மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சிடமிருந்து பெற வேண்டிய ரூபா 5,245,000 மீதி என்பவற்றிற்கான விரிவான பட்டோலை, உறுதி செய்யும் ஆவணங்கள், மீதிகளை உறுதிப்படுத்தல் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 144,225,557 கூட்டுத் தொகையுடைய 09 கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச் சான்றுகள், பொருட்களது பெறுவனவு மற்றும் வழங்குகல்களுக்கான பத்திரங்கள், விலைப்பட்டியல், பற்றுச்சீட்டுக்கள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், உறுதி செய்யும் ஆவணங்கள், நிறைவேற்றுக் குழு அங்கீகாரம், மீதிகளை உறுதிப்படுத்தல், நிலையான வைப்புச் சான்றிதழ் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(உ) குத்தகைச் சொத்துக்களது பெறுமதி உடன்படிக்கைகளில் குறிப்பிடப்படாமையால், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

ஐந்தொகையில் காணப்படும் ரூபா 151,284,553 குத்தகைச் சொத்துக்களது புத்தகப் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்ட ரூபா 5,132,982 என்பன சரியானவையா என்பதைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை.

(ஊ) சம்மேளனம் நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணவில்லை. நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் நிலையான சொத்துக்களின் உரித்து, அவை உள்ளமை மற்றும் பெறுமதி உறுதி செய்யப்படுவதற்கான ஆவணங்கள் மற்றும் பல ஆண்டுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை என்பன சமர்ப்பிப்படாமை காரணமாக, மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் உள்ள ரூபா 109,097,678 நிலையான சொத்துக்களது புத்தகப் பெறுமதியைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியாதிருந்தது.

(எ) நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட பிற்போட்ட வருமானமாகிய ரூபா 162,868,675 மற்றும் ஆண்டின்போது பதிவழிக்கப்பட்ட ரூபா 8,291,439 பிற்போட்ட வருமானம் என்பவற்றிற்குரிய விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவிலலை.

(ஏ) சம்மேளனக் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | • நிதிப்பிரமாணம் 751 | இருப்புப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| | • நிதிப்பிரமாணம் 756 | வருடாந்தப் பொருட் கணிப்பு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | சம்மேளனம் மீளாய்வாண்டின்போது ரூபா 7,846,101 கூட்டுத்தொகையுடைய விமானப்பயணச் சீட்டுக்களை அங்கீகரித்த கம்பனிகளில் அல்லாது பிற கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்திருந்தது. |

(ஐ) போட்டியின்றியும் எழுத்து மூல ஆவணமின்றியும் சம்மேளனம் தலைமை அலுவலகத்தின் இரண்டாம், மூன்றாம் மாடிகளை முறையே ரூபா 100,000 மற்றும் ரூபா 150,000 மாதாந்த வாடகைக்கு தனி நபர்களுக்கு மீளாய்வாண்டின்போது வழங்கியிருந்தது.

(ஒ) போட்டியின்றியும் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரமின்றியும் சம்மேளனம் விளையாட்டுக் குழுவினருக்கும் ஏனையோருக்கும் உணவு மற்றும் பானங்களை வழங்கும் ஒப்பந்தத்தை எழுத்து மூல உடன்படிக்கையல்லாது தனியாரிடம் வழங்கியதன் மூலம் மீளாய்வாண்டில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 13,887,701 வழங்கப்பட்டிருந்தது.

(ஓ) சட்டமா அதிபரின் சேவையைப் பெறக்கூடியபோதும், மீளாய்வாண்டில் சம்மேளனம் தனியார் சட்டக் கட்டணமாக ரூபா 6,456,237 செலவிட்டிருந்தது.

(ஔ) பல்வேறு நிறுவனங்களது கோரிக்கைகளின் பேரில் சம்மேளனம் மீளாய்வாண்டில் ரூபா 4,708,984 பெறுமதியான கால் பந்துகளை நன்கொடையாக வழங்கியிருந்தபோதும், அங்கீகரித்த பட்டோலை, விநியோக விபரம் என்பவற்றைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டின்போது எய்த வேண்டிய நோக்குகளையும் இலக்குகளையும் இனங்கண்டும் முகாமைத்தவத்தின் பொறுப்பை உணர்ந்தும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

(கா) பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தலின் பொருட்டு சகல நிதி ஆண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் பாதீடு தயாரிக்கப்பட வேண்டியபோதும், சம்மேளனம் மீளாய்வாண்டிற்கான பாதீட்டைத் தயாரித்திருக்கவில்லை.

(கி) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டலின் பிரகாரம் சம்மேளனம் 2014 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

(கீ) சம்மேளனம் சேவை எதனையும் பெறாது 20 சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்களது தனிப்பட்ட வேண்டுகோள்களுக்காக சம்மேளனத்தால் ரூபா 480,000 கொடுப்பனவு செய்திருந்தது.

## 5.2 இலங்கை கரப் பந்து சம்மேளனம்

------------------------------------------------------------

### 5.2.1 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை கரப்பந்து சம்மேளனத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,264,957 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக சம்மேளன ஆரம்பத்திலிருந்தே நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணியிருக்கவில்லை.

(ஆ) வெளிநாடுகள் நன்கொடையாக வழங்கிய விளையாட்டுத்துறை உபகரணங்கள் விடுவிக்கப்படுவதற்காக சம்மேளனம் ரூபா 3,080,298 சுங்கக் கட்டணமாகச் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், குறித்த உபகரணங்களது பெறுமதியைக் கணக்கிற்குக் கொண்டு வருவதற்குச் சம்மேளனம் தவறியிருந்தது.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 5,150,337 கூட்டுத்தொகையுடைய 08 கொடுக்கல் வாங்கல்கள் தொடர்புடைய பௌதீக, மெய்மையாய்வு அறிக்கைகள், நிறைவேற்றுக்குழு அங்கீகாரம், மதிப்பீடு, பொருட் பெறுவனவு மற்றும் விநியோக விபரம் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அம்மீதிகளைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை

(ஈ) சம்மேளனத்தின் கொடுக்கல் வாங்கல்களது கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது புலனாகிய சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (i) | 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | வெளிநாட்டுப் பயணங்களுக்காக விமானப் பயணச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்தலும் அவற்றிற்கான நடவடிக்கைகளும் அங்கீகரித்த கம்பனிகளின் மூலம் செய்யப்பட வேணடுமாயினும், அதற்கு முரணாக இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம் தனியார் |

| | |
|---|---|
| | கம்பனியிலிருந்து ரூபா 4,856,359 தொகையான விமானப்பயணச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்திருந்தது. |
| (ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>- வழிகாட்டல் 3.4 | போட்டியுடனான கூறு விலைகளைக் கோராது மிளாய்வாண்டில் சம்மேளனம் ரூபா 2,721,332 பெறுமதியான விளையாட்டுத்துறை உபகரணங்களையும் ஏனைய பொருட்களையும் கொள்வனவு செய்திருந்தது. |
| - வழிகாட்டல் 3.4 | போட்டியுடனான கூறு விலைகளைப் பெறாது சம்மேளனம் நீர்கொழும்பு கரையோர கரப்பந்தாட்ட போட்டிக்கான கூடங்களை நிர்மாணிப்பதற்கு வெளி நபர்களைத் தெரிவு செய்திருந்தது. கூட நிர்மாணிப்பு, நிர்வாகம் என்பவற்றின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 2,160,500 ஆகும். 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 500,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |

## 5.2.2 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

இலங்கை கரப்பந்துச் சம்மேளனத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 2 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா 2,573,500 சேர்ந்து நின்ற மீதிகளைத் திர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சுகததாச விளையாட்டுப் பல் கூட்டுத்தொகுதி அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,344,757 மீதி மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,048,707 மீதி என்பன இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 30,776,078 கூட்டுத்தொகையுடைய 14 கொடுக்கல் வாங்கல்களுக்குரிய நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களும், உறுதி செய்யும் ஆவணங்களும், விலைப் பட்டியலும் பொருள் விநியோக விபரம், செலவின விபரம், பொருட் பெறுவனவு, விநியோகம் என்பவற்றிற்குரிய கையிருப்பு அறிக்கைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ஈ) சம்மேளனக் கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் தெரிவுச் செவ்வைக்கு உட்படுத்தியபோது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| • நிதிப்பிரமாணம் 385 | இலங்கை கரப்பந்து சம்மேளனம் 123 Brass Awards கொள்வனவிற்கு காசோலை மூலம் அல்லாது காசாக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 300,000 வழங்கியிருந்தது. |
| • நிதிப்பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாதத்தினதும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று, அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டுமாயினும், சங்கம் 2013 ஆம் ஆண்டினது வங்கிக் கணக்கிணக்கக்கூற்றைத் தயாரித்திருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல் 3:4 | அரசாங்க பொருள் கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டலுக்கு முரணாக, நான்கு சந்தர்ப்பங்களில் பொருட்களைக் விடுவிப்பதற்கான சேவையைப் பெறுவதற்கும் வெகுமதிப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் கரப்பந்து மற்றும் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கும், ரூபா 1,183,612 செலவிடப்பட்டிருந்தது. |

(உ) சனாதிபதி தங்க விருதுப் போட்டிக்கு ரூபா 4,828,625 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன்பொருட்டு, பிரதான அனுசரணையாளராகத் தனியார் நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கு நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் மற்றும் நிறுவனத்துடனான உடன்படிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) இலங்கை கரப்பந்துச் சங்கம் அங்கீகரித்த பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்திருக்கவில்லை. ஊழியர்கள் பொருட்டு பெயர் வழிக் கோவைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் சம்மேளனம் செயல்நடவடிக்கை திட்டத்தைத் தயாரிக்கவில்லை.

(ஏ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்படவில்லை.

(ஐ) அரசாங்க பொருட்கொள்வனவு வழிகாட்டல் சுற்றறிக்கையின் 4.2.1 வழிகாட்டலின் பிரகாரம் சம்மேளனம் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை.

## 5.3 இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

---

### 5.3.1 நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம்

---

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17.19 பந்தியின் பிரகாரம் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான சொத்துக்களின் பாவனைக்காலம் மீள மதிப்பாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் தேய்மானம் கணக்கீடு செய்யப்பட வேண்டுமாயினும், பயன்பாட்டில் உள்ள ரூபா 552,660,460 கிரயமுடைய முழுமையான தேய்மானத்திற்குள்ளான சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறான நடவடிக்கையை எடுக்க இலங்கை கிரிக்கட் நிறுவனம் தவறியிருந்தது. மேலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 5,554,250,826 நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3.2 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களுக்கமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்திற்கும் முறையே ரூபா 2,187,280,006 மற்றும் ரூபா 567,601,808 என்பவற்றை செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 71,934,708 இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டியிருந்தது. இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,133,826,034 இலங்கை கிரிக்கட் நிறுவனத்திடமிருந்து பெறவேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட பெற வேண்டிய ரூபா 7,455,135 கூட்டுத்தொகையான அனுசரணை வருமானம் அறவிடப்படாதிருந்தது.

(இ) நிர்மாண வேலை முற்பணக் கூட்டுத்தொகையான ரூபா 19,345,013 மற்றும் ஏனைய முற்பணங்களாகிய ரூபா 13,714,688 கூட்டுத்தொகை என்பன ஓராண்டு கடந்தும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(ஈ) போட்டிகளுக்கான முற்பணமான ரூபா 15,427,701 தொகை ஓராண்டிற்கும் மேலாக தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(உ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,011,802 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களுக்குரிய பொருட்களது பெறுவனவு மற்றும் வழங்கல் பத்திரங்களும் மீதிகளை உறுதிப்படுத்தலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 5.3.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக, இலங்கை கிரிக்கட் நிறுவனம் ரூபா 25,252,115 கூட்டுத்தொகையான விமானப் பயணச் சீட்டுக்களை தனியார் கம்பனியிலிருந்து கொள்வனவு செய்திருந்தது. |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | இலங்கை கிரிக்கட் நிறுவனம் ரூபா 4,860,003 உடைய சொத்துக்கள் மற்றும் ரூபா 7,862,153 சட்டச் செலவினங்களை அரசாங்க கொள்வனவு வழிகாட்டலுக்கு முரணாக மேற்கொண்டிருந்தது. |

### 5.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்கும் வரிசை அமைச்சிற்கும் இடையே ஒருங்கிணைப்பிற்கான நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்திற்கமைய, பதவியணியில் அல்லாத பதவி ஒன்றுக்கு விண்ணப்பங்களைக் கோராது இலங்கை கிரிக்கட் நிறுவனம் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்திருந்தது. இலங்கை கிரிக்கட் நிறுவனம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

என்பவற்றால் குறித்த உத்தியோகத்தரது சம்பளமும் படிகளுமாக முறையே ரூபா 900,000 மற்றும் ரூபா 301,663 என்பன வருடாந்தம் செலவிடப்பட்டிருந்தது. குறித்த உத்தியோகத்தர் இலங்கை கிரிக்கட் நிறுவன வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டிருக்கவில்லை.

(ஆ) வரிசை அமைச்சினது செயலாளர் அல்லது அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் இல்லாது இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழு ஊழியர் ஒருவருக்கு 2013 ஏப்ரல் 01 முதல் 2016 மார்ச் 31 வரை பகுதி நேரக் கடமையாற்றி அலுவலகத்திலிருந்து செல்வதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. மீளாய்வாண்டின்போது இலங்கை கிரிக்கட் நிறுவனம் குறித்த உத்தியோகத்தருக்கு ரூபா 605,200 சம்பளமாகச் செலவிட்டிருந்தது.

(இ) இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் நலிவடைந்த நிதி நிலைமையைக் கருத்திற்கொள்ளாது ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்குப் புறம்பாக மீளாய்வாண்டின்போது ரூபா 5,000 முதல் ரூபா 86,250 வரையிலான வீச்சில் சம்பள ஏற்றம் வழங்கப்பட்டிருந்ததுடன், சுழல்பந்துப் பயிற்சியாளர் ஒருவருக்கு 2013 ஆம் ஆண்டின்போது ரூபா 215,400 சம்பள ஏற்றம் வழங்கப்பட்டுமிருந்தது.

(ஈ) இலங்கை கிரிகெட் நிறுவனம் மீளாய்வாண்டின்போது, 13 ஒரு நாள் போட்டிகளையும் 04 சர்வதேச டெஸ்ட் போட்டிகளையும் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரமின்றி ரூபா 45,094,300 பெறுமதியான 46,742 டிக்கட்களை கட்டணமின்றி வழங்கியிருந்தது. அவ்வாறு கட்டணமின்றி வழங்கப்பட்ட டிக்கட்களைப் பெற்றவர்களில் ஏறக்குறை 85 சதவீதமானோர் அவற்றைப் பெற்றுக்கொண்டமையை உறதி செய்திருக்கவில்லை.

### 5.3.5 இலாபத்தன்மையும் திரவத்தன்மையும்

இலங்கை கிரிக்கட் நிறுவனம் கடந்த சில ஆண்டுகளில் பெருமளவு செயற்பாட்டு நட்டத்திற்குள்ளாகியும் மீளாய்வாண்டின் போது ரூபா 392.7 மில்லியன் நிகர நட்டத்திற்குள்ளாகியுமிருந்தது. மீளாய்வாண்டு முடிவளவில் நிலவிய ரூபா 4,303.5 மில்லியன் பொறுப்பைத் தீர்த்து வைப்பதற்கு நிறுவனத்திடம் போதியளவு திரவச் சொத்துக்கள் இல்லாமையால் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை அது வெகுவாகப் பாதித்திருந்தது.

### 5.3.6 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் பாதகமான நிதி நிலைமையைக் கருத்திற்கொள்ளாது இலங்கை கிரிக்கட் நிறுவனம் 2013 ஆம் ஆண்டில் ரூபா 26.7 மில்லியன் சம்பள ஏற்றத்தையும் பாதீட்டு ஏற்பாடின்றி அவசர சந்தர்ப்பமாகக் கருதி 11 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 57.6 மில்லியன் செலவிட்டுமிருந்தது. மேலும், குறித்த வாகன ஒதுக்கீடு சம்பந்தமான விபரம் நிலையான சொத்துப் பதிவேட்டிலோ அல்லது வாகனப் பதிவேட்டிலோ பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கிரிக்கட் நிறுவனம் தேசியக் குழு அனுசரணைக்காகக் கம்பனி ஒன்றுடன் கையெழுத்திட்டிருந்த உடன்படிக்கையின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம் அனுசரணைக்கான மூன்றாம் தவணைப்பணமாகிய ரூபா 6,507,500 (USD 50,000) கொடுப்பனவானது 2014 செப்தெம்பர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்படவேண்டியபோதும், உரிய தொகை மீளாய்வாண்டு முடிவளவிலும் குறித்த கம்பனியிடமிருந்து அது அறவிடப்படவில்லை.

(இ) பாடசாலைக் கிரிக்கட் அடிப்படை வசதிகளை முன்னேற்றுவதற்கு தேவையான நிதிச் சேகரிப்பிற்கு 2014 சனவரி 14 அன்று துபாயில் அமுலாகிய நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக ஐக்கிய அரபு இராச்சிய கிரிக்கட் நிறுவனத்துடனான எழுத்துமூல உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை கிரிக்கட் நிறுவனம் தவறியிருந்தது. குறித்த நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,372,085 (USD 10,494) 2015 சனவரி 31 ஆந் திகதிவரையிலும் அறவிடப்படவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் நடாத்தவிருந்த கிரிக்கட் போட்டிகளுக்குப் புறம்பாகப் பெறப்பட்ட கிரிக்கட் சுற்றலாப் போட்டிகள் இரண்டில் இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்கு ரூபா 68,395,349 இழப்பு ஏற்பட்டிருந்தது. குறித்த 2 போட்டிகளிலும் ரூபா 51,155,618 நட்டம் ஏற்படும் என முன்னரே மதிப்பிடப்பட்ட போதும் போட்டிகளில் ஈடுபட முடிவு செய்யப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கிரிக்கட் நிறுவனம் மீளாய்வாண்டில் இலங்கையில் நடாத்திய சர்வதேச போட்டிகளுக்கு ரூபா 517,991 செலவிட்டு 295,517 டிக்கட்களை

அச்சிட்டிருந்தது. எனினும், போட்டிகளை நடாத்துவதற்கு முடிவு செய்யப்பட்ட இடம் பின்னர் மாற்றமடைந்ததால் 149,833 அல்லது 50 சதவீதமான டிக்கட்களை விற்பனை செய்யமுடியாது போயிற்று.

### 5.3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------

நிறுவனத்தின் பின்வரும் சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாகும்.

(அ) இலங்கை கிரிக்கட் நிறுவனம் அங்கீகரித்த கடன் நடைமுறை ஒன்றில்லாதும் கடனுக்கான பிணையைப் பெறாதும் 73 நிறுவன ஊழியர்களுக்கு (ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் உட்பட) வட்டியில்லாத கடனை வழங்கியிருந்தது. மேலும், கடனுக்கான பாதீட்டு நிதி ஏற்பாடும் இருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டு முடிவில் ரூபா 14,811,018 நிலுவைக் கடன் மீதி (முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட மீதியுடன்) இருந்தது. நிறுவனம் கடனை அறவிடுவதற்குப் பொருத்தமான கட்டுப்பாட்டை அறிமுகஞ் செய்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை கிரிக்கட் நிறுவனம் 2006 ஆண்டில் விளையாட்டை இரத்துச் செய்தல் மற்றும் கைவிடுதல் என்பவற்றிற்கான காப்புறுதி மேவுகையை மதிக்காமையால் காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு எதிராக ரூபா 1.3 பில்லியன் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடரப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு இறுதியளவில் வழக்குக்கெனச் செலவிடப்பட்டிருந்த சட்டச்செலவினம் ரூபா 11,369,716 ஆகும்.

(இ) இலங்கை கிரிக்கட் நிறுனம் 2012 ரீ 20 உலகக் கிண்ண செயலகத்தின் பிரதான பாதுகாவலரது சேவை உடன்படிக்கையை ஒருமனதாக முறியடித்து அவரைச் சேவையிலிருந்து விலக்கியிருந்தது. பிரதான பாதுகாவலர் ரூபா 50,000,000 இழப்பீடு கோரி வழக்குத் தொடுத்திருந்தார். இலங்கை கிரிக்கட் நிறுவனம் வழக்கின் பொருட்டு ரூபா 303,350 சட்டச் செலவினம் செய்யப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதியிலும் வழக்கின் தீர்ப்பு வழங்கப்படாதிருந்தது.

(ஈ) இலங்கை கிரிக்கட் நிறுவனம் சட்டப் பிரிவைச் செயற்படுத்தியபோதும், சட்ட சேவைகளைப் பெறுவதற்காக ஆலோசனைக் குழுவின் அங்கத்தவருக்கு ரூபா 600,000 மற்றும் இலங்கை ஊழியர் சம்மேளனத்திற்கு ரூபா 389,000 என மீளாய்வாண்டில் செலுத்தியிருந்தது. மீளாய்வாண்டில் சட்டப் பதவியணியினர் சம்பளம் ரூபா 3,111,960 ஆகும்.

(உ) 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற கிரிக்கட் சபைத் தேர்வுக்கு எதிராக வெளி நபர்கள் இலங்கை கிரிக்கட் நிறுவனத்துக்கு எதிராகத் தொடுத்த வழக்குத் தொடர்பாக இலங்கை கிரிக்கட் நிறுவனம் சட்ட வேலைகளுக்கு 2014 ஆம் ஆண்டின் இறுதிவரையில் ரூபா 18,281,073 செலவிட்டிருந்தது. பின்னர், இரு தரப்பினரும் செலவிட்ட சட்டச் செலவினங்களை ஒவ்வொரு தரப்பினரும் செலவிட்டச் சட்ட செலவினங்களை தாமே பொறுப்பேற்பதாக இணக்கப்பட்டு வழக்கை வாபஸ் பெற்றிருந்தனர். வழக்கை வாபஸ் பெற்றமைக்கான காரணம் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்படவில்லை.

(ஊ) இலங்கை கிரிக்கட் நிறுவனம் டிக்கட் மற்றும் ஏனைய பொருட்களை அச்சிடுவதற்கு, கூறு விலைகளைக் கோரும்போது நிறுவகத்தில் பதிவுசெய்யப்பட்ட, அனுபவம் உள்ள அச்சகத்தாரிடமிருந்து கூறு விலைகளைக் கோரவில்லை. அதன் காரணமாக, தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு ரூபா 762,144 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(எ) இலங்கை பிரிமியர்லீக் (SLPL) – 2012 தொடர்பாக தனியார் கம்பனி ஒன்றிலிருந்து பெற வேண்டிய ரூபா 11,409,170 நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்துடன் நட்டக்கடனாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஏ) இலங்கை கிரிக்கட் நிறுவனம் 2008 ஆம் ஆண்டில் விளையாட்டுச் சங்கம் ஒன்றிற்கு வழங்கிய ரூபா 15 மில்லியனில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,022,704 கடன் மீதியும் ரூபா 2,861,149 தொகையான பெற வேண்டிய கடன் வட்டியும் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்துடன் நட்டக் கடனாகப் பதிவழிக்கப்பட்டிருந்தன.

### 5.3.8 மனிதவள முகாமைத்துவம்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் ஆட்சேர்க்கப்பட வேண்டிய பதவியணி எத்தனை என்பன அங்கீகரிக்கப்படாது இலங்கை கிரிக்கட் நிறுவனம் மீளாய்வாண்டில் ஊழியர்களுக்கு வழங்கிய சம்பளமும் படியும் ரூபா 392,011,529 ஆகும்.

(ஆ) 2013 ஆம் ஆண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் பணிக்கொடைக் கடப்பாடு என்பன முறையே ரூபா 37,298,715 மற்றும் ரூபா 42,911,160 என்பனவாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 15.5 சதவீதம் ஊழியர் பணிக்கொடைக் கடப்பாடு அதிகரித்தமை தொடர்பில் பிரதானமாக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களைச் சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளின்றி 216 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 26,728,116 கூட்டுத்தொகையான சம்பள ஏற்றம் தாக்கமளித்திருந்தது.

(இ) சில ஒப்பந்த ஊழியர்களது சேவை உடன்படிக்கை முடிவுற்றபோதும், இலங்கை கிரிக்கட் நிறுவனம் அங்கீகாரமின்றி அவர்கள் வேலையைத் தொடர அனுமதித்திருந்தது.

### 5.3.9 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்கான உள்ளகக் கணக்காய்வுக் கூறை நிறுவுவதற்குப் பதிலாக அப்பணி கணக்காய்வு நிறுவனம் ஒன்றிடம் 2012 ஜூலை 12 தொடக்கம் கையளிக்கப்பட்டிருந்தது.